**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், ஜெயங்கொண்டம்**

**அசல் வழக்கு எண். 186/2013**

நாள்: 07.07.2026.

பெயர்: அருண்ராஜ் (பி.வா.சா.1) த/பெ: ராகவன்

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டார்

<u>வாதி தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி...</u>

1) எத்தனை அயிட்ட சொத்துக்களுக்கு வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் 5 அயிட்ட சொத்துக்களுக்கு. அதன் மொத்த விஸ்தீரணம் என்ன என்றால் 2 ஏக்கர் ஆகும். எனக்கும், இதர பிரதிவாதிகளுக்கும் ஒரே கட்சி தான் என்றால் சரிதான். தாவா சொத்துக்கள் எனது தந்தை கிரையம் பெற்ற சொத்துகள் என்றால் சரிதான். எனது தந்தை எப்போது கிரையம் பெற்றார் என்றால் 1988 ஆம் ஆண்டில் சர்வே எண்.374/2B1, 374/4A கிரையம் பெற்றார், 2004 ஆம் ஆண்டில் சர்வே எண்.371/10C, 374/1B1, 374/1B3 சொத்துக்களை கிரையம் பெற்றேன். எனது தந்தை 1988 ஆம் ஆண்டு யாரிடம் கிரையம் பெற்றார் என்றால் அன்பழகன், பன்னீர்செல்வம், பன்னீர் செல்வம் மகன் மதியழகன் ஆகியோரிடமிருந்து கிரையம் பெற்றார். 2004 ஆம் ஆண்டு யாரிடமிருந்து கிரையம் பெற்றார் என்றால் ரெங்கசாமி என்பவரிடமிருந்து. ரெங்கசாமி எனக்கு என்ன உறவு முறை வேண்டும் என்றால் எனது தாயின் சித்தப்பா ஆவார்.

2) எனது தந்தை 1988ல் கிரையம் பெறும் போது எனக்கு என்ன வயது என்றால் 2 வயது, அந்த சமயத்தில் எனது தந்தை பெற்ற கிரையத்தின் விபரங்கள் எனக்கு தெரியாது என்றால் சரிதான். வாதி ராமசந்திரன் எனக்கு என்ன உறவு முறை என்றால் எனது தாயின் சித்தப்பா மகன் ஆவார், வாதி எனது தந்தைக்கு என்ன உறவு முறை என்றால் மாமா ஆவார். எனது தந்தை ராகவன் உடன் பிறந்தவர்கள் எத்தனை பேர் என்றால் எனது தந்தையையும் சேர்த்து 4 பேர், அவர்கள் 1) அம்சவள்ளி, 2) ராகவன், 3) கேசவன், 4) சாவித்திரி ஆவார்கள். எனது தந்தையின் தந்தை எப்போது இறந்தார் என்று எனக்கு தெரியுமா என்றால் தெரியாது.

3) பெரியசாமி என்பவரை எனக்கு தெரியுமா என்றால் தெரியும், அவர் எனது தாயின் தந்தை ஆவார். எங்களுக்கும், வாதிக்கும் விரோதம் ஏதும் இல்லை என்றால்

சரியல்ல, விரோதம் உள்ளது. எப்போதிலிருந்து என்றால் 2007 ஆம் ஆண்டிலிருந்து விரோதம் உள்ளது. என்ன விரோதம் என்றால் 2007 ஆம் ஆண்டு வாதி சர்வே எண்.371/4, 5 ஆகிய சொத்துக்களுக்கு அவர் பெயரில் பட்டா மாற்றிக்கொண்டு தகராறு செய்தார், அதிலிருந்து விரோதம் உள்ளது. சர்வே எண்.371/4, 5 ஆகிய சொத்துக்களை எனது தாயின் தந்தையான பெரியசாமி, குப்புசாமி என்பவரிடமிருந்து கிரையம் பெற்றார் என்றால் சரிதான், அவர் கிரையம் பெற்ற தேதியில் நான் பிறக்கவில்லை என்றால் சரிதான். அந்த கிரையம் 12.03.1971 தேதியில் ஏற்பட்டது என்றால் சரிதான். அந்த கிரையத்தை குப்புசாமிக்கு பெரியசாமி பணம் கொடுத்து வாங்கவில்லை என்றால் சரியல்ல, பணம் கொடுத்து தான் வாங்கினார். அந்த பத்திரத்தை நான் பார்த்துள்ளேனா என்றால் பார்த்துள்ளேன், அதன் விபரங்களை படித்து பார்த்துள்ளேனா என்றால் இல்லை.

4) என்னிடம் காட்டப்படும் பத்திரத்தின் நகல் தான் பெரியசாமி குப்புசாமிக்கு கொடுத்த கிரைய பத்திரம் என்றால் சரிதான், அந்த பத்திரத்தில் பணம் கொடுத்து வாங்கியதாக எழுதப்படவில்லை என்றாலும், பிராமிசரி நோட்டு எழுதிக்கொடுத்துவிட்டு கிரையம் பெற்றாதாக கண்டு எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ–1 14.10.2004 கிரைய பத்திரத்தில் உள்ள கையெழுத்து யாருடையது என்றால் எனது தந்தையின் கையெழுத்து ஆகும். பெரியசாமி, குப்புசாமி ஆகியோருக்குள் ஏற்பட்ட கிரையப் பத்திரத்தின்படி பெரியசாமி பிராமிசரி நோட்டு தொகையை கொடுக்காமல் இறந்துவிட்டதால் பெரியசாமியின் மனைவி பச்சையம்மாளும் அந்த தொகையை செலுத்தமுடியாமல் அந்த தொகையை வாதியின் தந்தை ராமசாமி மற்றும் அஞ்சலை அகியோரிடமிருந்து அந்த கடனை அடைத்துவிட்டு, அதற்காக பெரியசாமி பெயரில் பெற்ற கிரைய சொத்தை ராமசாமி, அஞ்சலை ஆகியோருக்கு செட்டில்மெண்டாக பச்சையம்மாள் எழுதிக்கொடுத்துவிட்டார் என்றால் சரியல்ல. செட்டில்மெண்டை பெற்ற அஞ்சலை தனது பாகத்தை ராமசாமிக்கு வாய்மொழியாக விட்டுக்கொடுத்துவிட்டதால் ராமசாமி பெயரில் முழு சொத்திற்கு பட்டா மாறிவிட்டது என்றால் சரியல்ல.

5) தானசெட்டில்மெண்ட் எழுதிக்கொடுத்த போது ராமசந்திரனுக்கு என்ன வயது என்றால் அப்போது அவர் பிறக்கவில்லை. பட்டா ராமசாமி மற்றும் அவரது

மனைவி அஞ்சம்மாள் ஆகியோர் பெயருக்கு மாறிய போது ராமசந்திரனுக்கு என்ன வயது என்றால் அவ்வாறு பட்டா மாறவில்லை, அஞ்சலையம்மாள் உயிருடன் இருக்கும் போது பட்டா மாறவில்லை, இறந்த பின்பு 2006 ல் தான் பட்டா மாறியது அந்த தேதியில் ராமசந்திரனுக்கு சுமார் 14, 16 வயது இருக்கும். பச்சையம்மாள் செட்டில்மெண்ட் எழுதிக்கொடுத்தது 30.05.1980 தேதி என்றால் சரிதான். மேற்படி 30.05.1980 செட்டில்மெண்டை பொறுத்தவரை அதனை ரத்து செய்வதற்கோ, செல்லாது என கோருவதற்கோ தற்போது காலாவதி இல்லை என்றால் சரியல்ல.

6) குப்புசாமிக்கு பிராமிசரி நோட்டு தொகையை திரும்ப கொடுத்து பைசல் செய்து விட்டதற்கு ஆவணம் ஏதேனும் உள்ளதா என்றால் இல்லை, எனது பாட்டி கடன் அனைத்தையும் கொடுத்துவிட்டதாகவும், பல பேப்பர்களை கிழித்து போட்டுவிட்டதாகவும் எனது பாட்டி எனது தாயிடம் கூறினார், எந்த தேதியில் கூறினார் என்றால் தேதி தெரியாது, சுமார் 1994, 1995 வருட வாக்கில் கூறினார். அந்த 1994 ஆம் வருடத்திற்கு முன்பே எனது பாட்டி செட்டில்மெண்ட் எழுதிக்கொடுத்துவிட்டார் என்றால் சரிதான். செட்டில்மெண்ட் எழுதிக்கொடுத்துவிட்ட விபரத்தையும் எனது பாட்டி எனது தாயிடம் கூறியுள்ளாரா என்றால் கூறியுள்ளார்.

7) என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.2 –13.06.2011 தேதிய உயிலில் உள்ள கையெழுத்து எனது தந்தையுடையதா என்றால் இல்லை. எனது அண்ணன் அருண் முருகன் 10.09.2013 தேதியில் ராமச்சந்திரனிடமிருந்து பெற்ற கிரைய ஆவணம் பி.வா.சா.ஆ.2 என்றால் சரிதான், ஆனால் அது கிரையமாக கொடுத்தது இல்லை, சமரசத்திற்காக கொடுத்தது. சமரசத்திற்காக கொடுத்தது என்று பி.வா.சா.ஆ–2 ல் கண்டு எழுதப்பட்டுள்ளதா என்றால் இல்லை, ஆனால் அதன் சாட்சிகளுக்கு சமரசத்திற்காக கொடுத்தது என்று தெரியும். எனது அண்ணன், அருண் முருகனை சாட்சியாக அழைத்து கேட்டால் அவர் பெற்ற கிரைய ஆவணம் சமரசத்திற்காக தான் கொடுக்கப்பட்டது என்று சாட்சி கூறுவாரா என்றால் கூறுவார். எனது அண்ணன் அருண்முருகனை இவ்வழக்கில் சாட்சியாக விசாரிக்க போகிறோமா என்றால் இல்லை. அருண் முருகனை சாட்சியாக விசாரித்தால் அவர் உண்மையை கூறிவிடுவார் என்பதற்காக தான் அவரை சாட்சியாக விசாரிக்க போவதில்லை என்று

கூறுகிறேன் என்றால் சரியல்ல, அவரை சாட்சியாக அழைத்தாலும் நான் கூறுவதை தான் கூறுவார். பி.வா.சா.ஆ.2 கிரையத்திற்கு ரூபாய்.5,76,000/- பணத்தை கொடுத்து தான் ராமசந்திரன் மற்றும் அவரின் தாயார் ஆகியோரிடம் எனது அண்ணன் அருண்முருகன் கிரையம் பெற்றார் என்றால் சரியல்ல. நான் பி.வா.சா.ஆ.2 ல் சாட்சி கையெழுத்து போடவில்லை என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.2 ஏற்பட்டதைப் பற்றி எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரியல்ல, தெரியும். பி.வா.சா.ஆ.2 யை பற்றி எனக்கு எந்த விபரமும் தெரியாது என்றால் சரியல்ல. எனது தந்தையை நாங்கள் சரியாக பராமரிக்காததாலும், வாதியின் அவரது தாயாரும் பராமரித்த காரணத்தினால் தான் எனது தந்தை வாதிக்கு உயில் எழுதிவைத்தார் என்றால் சரியல்ல. எனது தந்தை எழுதிவைத்த உயிலில் கண்ட சொத்துக்கள் அவரது தனிப்பட்ட கிரைய சொத்துக்கள் என்பதால் அந்த உயில் சொத்தைப் பொறுத்து உயில் செல்லும் என்றால் சரியல்ல.

8) நான் கூறுவது போல் எனது தந்தை பெயரில் ஏற்பட்ட கிரையம் எனது தாயாருடைய வீட்டின் பணத்தைக்கொண்டு வாங்கப்பட்டது என்று கூறுவது பொய் என்றால் சரியல்ல. எனது தாயார் வீட்டின் பணத்தைக் கொண்டு தான் எனது தந்தை பெயரில் கிரையம் பெறப்பட்டது என்பதை காட்டுவதற்கு ஆவணம் ஏதும் தாக்கல் செய்துள்ளோமா என்றால் இல்லை, ஆனால் ஆவணங்கள் உள்ளது. 16.05.2022 தேதியில் வாதியின் வேறு சொத்துக்களை 3ம் பிரதிவாதியான எனது அண்ணன் அவரது மனைவி பெயரில் கிரையம் பெற்றுள்ளார் என்றால் எனக்கு தெரியாது, நானும், எனது அண்ணனும் தனித்தனியாக வசித்து வருவதால் அந்த விபரங்கள் எனக்கு தெரியாது.

9) செட்டில்மெண்ட் எழுதி வைத்த காரணத்தினால் விரோதம் ஏற்பட்டது என்று கூறியதற்கு புகார் ஏதேனும் கொடுத்துள்ளோமா என்றால் இல்லை. வாதி பெயரில் எனது தந்தை எழுதிய உயில் பற்றிய விபரம் எனக்கு எப்போது தெரியும் என்றால் இவ்வழக்கு தாக்கல் செய்த பின்னர் தான் தெரியும். உயிலில் கண்ட சொத்தை உயில் படி வாதி அடைந்து அனுபவம் செய்து வந்த நிலையில் நாங்கள் சில சொத்துக்களை கிரையம் கொடுத்த காரணத்தினால் தான் வாதி இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல. நாங்கள் கொடுத்த அந்த கிரையங்கள்

நடைமுறைக்கு வராத காரணத்தினால் தான் கிரையம் பெற்றவர்கள் பெயருக்கு பட்டா மாறவில்லை என்றால் சரியல்ல, பட்டா மாறிவிட்டது.

10) பட்டுசாமியின் மகன் கொளஞ்சி என்பவருக்கு எங்களுக்கும் விரோதம் ஏதும் இல்லை என்றால் சரிதான். பக்கிரிசாமி மகன் மோகனுக்கும் எங்களுக்கும் விரோதம் இல்லை என்றால் சரிதான். வாதியின் மீது தாக்கல் செய்யப்பட்ட குற்ற வழக்கு பொய் வழக்கு என்பதால் தான் தள்ளுபடி செய்யப்பட்டது என்றால் சரியல்ல. அந்த குற்ற வழக்கில் சமாதனம் பேசி முடிக்கப்பட்டதாக தீர்ப்பளிக்கப்பட்டதா என்றால் எனக்கு தெரியாது. மேற்படி தீர்ப்பின் மீது மேல்முறையீடு ஏதேனும் தாக்கல் செய்யப்பட்டதா என்றால் எனக்கு தெரியாது. அந்த வழக்கு பொய் வழக்கு என்பதால் தான் அதன்மீது மேல்முறையீடு ஏதும் எடுக்கவில்லை என்றால் தெரியாது.

11) வா.சா.ஆ.2 உயில் மற்றும் பி.வா.சா.ஆ.1 செட்டில்மெண்ட் ஆவணம் ஆகியன செல்லாது என்றும், அதை ரத்து செய்ய வேண்டும் என்று நடவடிக்கை ஏதும் நாங்கள் எடுக்கவில்லை என்றால் சரியல்ல. தாவாப்படி தீர்ப்பாக வேண்டும் என்றால் சரியல்ல.

ஒப்பம்/ரா.அருண்ராஜ்/

திறந்த நீதிமன்றத்தில், சாட்சி சொல்ல சொல்லி, என்னால் தட்டச்சருக்கு திருப்பி சொல்லப்பட்டு, அவரால் தட்டச்சிடப்பட்டு, சாட்சிக்கு படித்து காட்டி, அவரால் சரி என ஒப்புக்கொண்டு கையெழுத்து செய்தார்.

ஒப்பம்/ம.சி. கண்ணதாசன்/
கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
ஜெயங்கொண்டம்.